DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

SESSIONS CASE NO: 99/2018

| | | | |
|---|---|---|---|
| Name | : வேணுகோபால் | Deposition of Witness for | : P.W. 4 |
| Father's Name | : கருப்பசாமி | Caste | : |
| Age | : | Calling | : |
| Village | : | Taluk | : |
| | | District | : |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 08.02.2021

முதல்விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் தாராபுரத்தில் வசிக்கிறேன். கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து கடந்த 31.07.2016 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் நான் காங்கயம் டவுன் கிராம நிர்வாக அதிகாரியாக பணியில் இருந்தேன். அப்போது கடந்த 24.10.2013 அன்று காலை 6.00 மணியளவில் நான் எனது அலுவலகத்தில் இருந்தபோது காங்கயம் மதுவிலக்கு அமல் பிரிவில் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்பு வந்தது. மேற்படி தொலைபேசி அழைப்பில் காவல் ஆய்வாளர் எரிசாராய வழக்கு சம்பந்தமாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டி இருப்பதால் என்னை உடனே புறப்பட்டு மதுவிலக்கு பிரிவு அலுவலகத்திற்கு வரசொன்னார். சாட்சி தற்போது போலி மதுபான வழக்கிற்காக வரசொன்னதாக கூறுகிறார். நானும் எனது உதவியாளர் தங்கமுத்துவும் காலை சுமார் 6.30 மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு சென்றோம். மேற்படி மதுவிலக்கு பிரிவு அலுவலகத்தில் வைத்து ஆய்வாளர் எங்களுக்கு பூபதி மற்றும் சரவணக்குமார் ஆகியோர்களை அடையாளம் காட்டினார். அப்போது மேற்படி இருநபர்களும் எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் சாட்சி கையெழுத்து இட்டோம். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி எதிரிகள் இருவரும் சொன்னவாறு காங்கயம் டு கோயமுத்தூர் சாலையில் அகஸ்திலிங்கம்பாளையம் பிரிவில் முல்லை நகரில் அமைந்துள்ள ஆர்.எஸ் குடோனுக்கு எங்களை காவல் ஆய்வாளரும், எதிரிகளும் அழைத்து சென்றார்கள். அங்கு ஒரு 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் 10 லி அளவுக்கு போலி மதுபானம் இருந்தது. அதில் 350 மி.லி அளவிற்கு 8 பாட்டில்களில் எடுத்து வெள்ளை நிற காடா துணியால் சுற்றி கட்டி சீல் வைத்தார்கள். அந்த மாதிரிகளுக்கு எஸ் 1 முதல் எஸ் 8 என குறியீடு செய்துகொண்டார்கள். ஒரு கட்டுக்கு 100 வீதம் 50 எண்ணிக்கையில் லேபிள்கள் எடுத்தார்கள்,10 எண்ணிக்கை கம் பாட்டில்கள், 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 30 எண்ணிக்கை, 50 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 20 எண்ணிக்கை, 2 பெட்டிகளில் தலா 576 எண்ணிக்கை கொண்ட காலி பாட்டில்கள் , மாருதி டீலக்ஸ் என்ற பெயரில் பிராந்தி காலி பாட்டில்கள் 4000 எண்ணிக்கை, கிரீன் மேஜிக் லேபிள்கள் ஒரு கட்டுக்கு 2000 வீதம் 16 கட்டுகள், டி.வி.எஸ் எக்செல் நீல நிற வண்டி ஒன்று, ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் எழுதி அங்கிருந்து கைப்பற்றினார்கள். அதில் என்னிடமும், எனது உதவியாளரிடமும் சாட்சி கையெழுத்து பெற்றார்கள். அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் போலீசார் தயார் செய்தார்கள். சாட்சி தற்போது கைப்பற்றிய டிவிஎஸ் எக்செல் வண்டியின்நிறம் பச்சை என சொல்கிறார். அதிலும் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். பிறகு அனைவரும் வந்துவிட்டோம். பூபதி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகலின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 15. சரவணக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் நகலின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ 16. அப்போது தயாரிக்கப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 17. (2,7 மற்றும் 9 வது எதிரிகள் தரப்பு ஆட்சேபணையோடு அ.சா.ஆ 15 மற்றும் 16 குறியீடு செய்யப்படுகிறது. ) இதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

பின்னர் மீண்டும் என்னை மதுவிலக்கு அமல் பிரிவு ஆய்வாளர் கடந்த 31.10.2013 ம் தேதி

மதியம் 12.30 மணியளவில் என்னை அவரது அலுவலகத்திற்கு வரசொல்லி தொலைபேசியில் அழைத்தார். உடனே நான் புறப்பட்டு எனது உதவியாளருடன் அங்கு சென்றேன். அங்கு ஆய்வாளர் எங்களிடம் ராமச்சந்திரன் என்பவரை அடையாளம் காண்பித்தார். எங்கள் முன்னிலையில் அவரிடம் எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னிடமும் எனது உதவியாளரிடமும் கையெழுத்து பெற்றார்கள். அதுகுறித்தும் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்.

2, 7 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு வரவழைத்து இந்த வழக்கில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நான் சாட்சியாக இருந்தேன் என்றால் சரிதான். பூபதி, சரவணக்குமார் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோரிடம் காவல்நிலையத்தில் வைத்துதான் போலீசார் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள் கணிணியில் டைப் செய்யப்பட்டவை ஆகும். நான் அன்று ஒப்புதல் வாக்குமூலங்களிலும், கைப்பற்றுதல் மகஜரிலும் நீலநிற மை கொண்ட பால்பாயிண்ட் பேனாவினால் கையெழுத்து செய்தேன். ராமச்சந்திரனின் ஒப்புதல் வாக்குமூலத்தை 31.01.2013ம் தேதி அன்றுதான் பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு பெண் காவலர் டைப் செய்தார். ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள அனைத்து வாசகங்களும் கணிணியில் டைப் செய்யப்பட்டவை என்றால் சரிதான். அந்த பெண் காவலர்தான் எங்களிடம் அதில் கையெழுத்தும் பெற்றார் என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்களை இப்போது என்னால் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியாது. ஆனால் நான் அதை படித்துப்பார்த்துதான் கையெழுத்து போட்டேன். இப்போது ஞாபகமில்லை. மேற்படி ராமச்சந்திரனை என்னால் அடையாளம் சொல்லமுடியுமா என்றால் சொல்லமுடியும் வரிசையில் வெள்ளை அரைக்கை சட்டை மற்றும் வேஷ்டி அணிந்து நிற்பவர்தான் ராமச்சந்திரன் ஆவார். போலீசார் அவரை கைது செய்தபிறகுதான் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அரசு அலுவலர் என்றால் சரிதான். குற்ற வழக்குகளில் சாட்சியாக இருக்க நான் எனது மேலதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும் என்றால் சரிதான். அதுபோன்று நான் அனுமதி ஏதும் பெறவில்லை என்றால் சரியல்ல. தொலைபேசியில் தகவல் தெரிவித்த பின்புதான் சென்றேன். தகவல் என்பதும் அனுமதி பெறுவது என்பதும் வேறுவேறு நடவடிக்கை என்றால் சரிதான். ஆவணப்பூர்வமாக அனுமதி பெறவில்லை என்றால் சரிதான். எங்களது அன்றாட நடவடிக்கைகள் குறிப்பேட்டில் எழுதப்படவேண்டும் என்றால் சரிதான். ஆனால் அதுபோன்ற பழக்கம் நடைமுறையில் இல்லை. நான் சொல்வதுபோல் எங்கள் முன்னிலையில் போலீசார் எதிரிகளிடம் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றாலும், போலீசாரே தன்னிச்சையாக தயாரித்துக்கொண்டு பிறகு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றாலும் சரியல்ல. ராமச்சந்திரன் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் எந்த பொருளும் இந்த வழக்கில் எனது முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான்.

3 மற்றும் 10 வது எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை

3 மற்றும் 10 வது எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மறுவிசாரணை இல்லை.